# வேத இலக்கியங்கள் காட்டும் இந்துக்களின் திருமண நடைமுறைகள்

திருமதி.கலைவாணி -இராமநாதன்

***அறிமுகம்***

இந்துக்கள் வாழ்வில் இடம்பெறும் சடங்குமுறைகளில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது திருமணச் சடங்கு ஆகும். இந்து சமயம் தனிமனித வாழ்வினை நான்கு பருவங்களாக வகுத்துள்ளது. முதலாவது பிரம்மச்சாரியம்-குழந்தைப் பருவம், கல்வி கற்றல் பருவம்: இரண்டாவது கிருகஸ்தம். கிருகம்-இல்லம், இல்வாழ்வு-இல்லறவாழ்வு பற்றியது. அறம் சார்ந்த வாழ்வாகவே ஒரு இந்துவின் குடும்ப வாழ்வு அவதானிக் கப்பட்டுள்ளது. இளையவரான ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் வாழ்விற் சமூக ரீதியான அங்கீகாரம் பெற்றுத் தருவதே 'திருமணம்' என்னும் நிகழ்வாகும். திரு-என்றால் செல்வம், அழகு, செம்மை முதலிய பொருளில் வழங்கப்படும். 'மணம்' என்றால் நறுமணம், வாசனை, இணைப்பு, பந்தம் எனவும் பொருள்படும். இருவர் வாழ்வில் அன்பினால் இணைதல்-அந்த அன்பு குழந்தைச் செல்வங்களுடன் மலர்ந்து மணம் பரப்புதல்-ஒரே குடும்பமாக நிலைபெறுதல் என்னும் வகையில் 'திருமணம்' என்ற சொல்லானது இந்துக்களிடையே நிறைவான பொருளிலே வழங்கப்படுகின்றது. இதனை,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட்பேறு"

என்றார் வள்ளுவர். 'திருமணங்கள் காலதேச வர்த்தமானங்கட்கேற்ப வேறுபாடுகள் காணப்பட்டாலும் இந்துக்கள் வாழ்வில் திருமணம் என்பது போற்றுதற்குரிய புனிதமான நிகழ்வாகும். மணவாழ்வென்பது தனிமனித வாழ்வின் வளர்ச்சியில் வாழ்நாள் முழுவதனையும் பூரணப்படுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாகும். தனித்தனியாக தமது குடும்பச் சூழலில் வாழ்ந்த இருவர் தமக்கென ஓர் தனிக் குடும்ப அமைப்பினை ஏற்படுத்தும் ஒரு பிரதான செயற்பாடாகும். திருமண வாழ்வின் வெற்றி கணவன் மனைவியரிடையே பரஸ்பரம் அன்பு, புரிந்துணர்வு, ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் பண்பு, விட்டுக்கொடுத்தல், ஒத்துழைக்கும் ஆற்றல் இவற்றிலேயே தங்கியுள்ளது. எனவே ஆண்-பெண் இருவரதும் உடல்-உளரீதியான மன ஒருமைப்பாட்டின் ஜீவ ஐக்கியத்திலேயே திருமண உறவானது பெரிதும் தங்கியுள்ளது.

திருமணம் எல்லா இனத்தவர், மதத்தவர், எல்லாநாட்டினர்க்கும் பொதுவான நியதியும் சமூக நீதியுமாகும். ஆனால் அவை நாட்டுக்கு நாடு, இடத்திற்கிடம் பிரதேசவாரியாகவும் இன, மத ரீதியான வேறுபாடுகளைக் கொண்டவையாகவும் உள்ளன. இந்துக்களின் திருமணமுறைகள் மதவழிச் சடங்காகவே புராதன காலம் தொட்டு வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இவ்வாறே இந்துக்கள் மட்டுமன்றி கிறிஸ்தவர், இஸ்லாமியர் ஆகியோரும் தத்தம் மதவழிமுறைமைக்கேற்ப திருமண முறைகளை வகுத்துக் கடைப்பிடிக்கின்றனர். காலப்போக்கில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தான் திருமணங்கள் சட்டரீதியாக்கப்பட்டன. திருமணச் சட்டங்களும் மதரீதியாகவே அமைக்கப்பட்டன. அதன்படி இந்துத் திருமணச்சட்டம், இஸ்லாமிய திருமணச் சட்டம் என அவை பதிவுத் திருமணச் சட்டமாக முக்கியத்துவம் பெற்றன. அதுவரை திருமணங்கள் மரபு ரீதியாக, சம்பிரதாயபூர்வமாக சமயச்சடங்காகவே நடைபெற்று வந்ததை கி.பி. 3ம் நூற்றாண்டில் தோன்றிய சங்க இலக்கியங்களும் தொல்காப்பியமும் எடுத்துக்காட்டுகின்றன. இவற்றிலும் வஞ்சனை, ஏமாற்று, துரோகம் என்பன நாகரிகமடைந்த சமூகத்திலும் தொடர்ந்தபோது பாதிக்கப்பட்ட சாராருக்குப்

பாதுகாப்பு வழங்குவதற்காக திருமணங்கள் நாளடைவில் சட்டரீதியாக்கப்பட்டன என்பதும் பெறப்படும். அதுவே இன்று 'பதிவுத் திருமணம்' எனப் புதுப்பெயர் பெற்றுள்ளது. தாலி கட்டிக் கொள்கிறார்களோ இல்லையோ சட்டரீதியாகப் பதிவு செய்வது அவசியம் என்பதனை அரசு உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதுவே அவர்களது சந்ததியினருக்கு ஒரு சமூக அந்தஸ்து ஏற்படவும் வழிவகுப்பதாக அமைந்தது பெரும் நன்மைதரும் விடயமாகும்.

***சமய இலக்கியங்களில் திருமணங்கள்***

சட்டரீதியாக்கப்பட்ட திருமணங்கள் அமைந்தபோதும் இந்துக்களிடையே இன்று புலம்பெயர்ந்தும் ஐரோப்பிய நாடுகட்குச் சென்றபோதும் கூட சமய ரீதியான மதச் சம்பிரதாயங்களுடன் கூடிய திருமணச் சடங்குகளே பிரபலயம் பெற்று விளங்குகின்றன.[1] இதனைக் காணும்போது சமய மரபுகளும், பாரம்பரியம் பேணும் பண்புகளும் இந்து சமுதாயத்தினரிடையே மிக ஆழமாக வேரூன்றியுள்ளன என்பது தெளிவாகின்றது. 'திருமணம்' என்னும் ஓர் வாழ்க்கை ஒழுங்கு முறையானது வரலாற்று ரீதியான ஆய்வில் அவ்வக்கால சமுதாயப் பழக்கவழக்கங்களைச் சார்ந்து அமைவதாக இருக்கின்றது.

"திருமணம் என்பது இந்துக்கள் வாழ்வில் வெறும் இயல்புக்க விவகாரமன்று. ஆனால் இயல்புக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்ட ஓர் ஒழுங்குமுறை, இருவேறு உள்ளங்களின் ஆளுமை, ஆற்றல்கள், ஒருவர்க்கொருவர் என்று இணையும் அனுபவங்களில் மகிழ்ச்சியும் காதலும் துன்பமும் உடன்பாடுகளும் துயரங்களும் அடங்கியவை"[2]

என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளமை இந்துக்களின் திருமண வாழ்விற்கு ஆயுள் அதிகம் என்பதனை எடுத்துக்காட்டும். இப்படிப்பட்டதொரு நெறிமுறையான திருமணங்கள் பற்றியே வேதகாலத்தில் பெரும்பாலும் பேசப்பட்டது. வேதகாலம் தந்தைவழிச் சமூகமாகவே அமைந்திருந்தது. கி.மு.1500-2000 ஆண்டு காலப் பகுதியில் இந்தியாவுக்குள் வந்து தமது பண்பாட்டை ஸ்தாபித்துக்கொண்ட வேதகால மக்களிடையே திருமண வழக்குகள் நிரந்தரமான அமைப்பாகக் காணப்பட்டன. அன்றித் தற்காலிக ஒழுங்கு முறையாக எங்கும் பேசப்படவில்லை.[3] இக்காலத்தில் பல்வேறு முனிவர்களும் ஞானிகளும் கவித்துவ மலர்ச்சியினால் உருவாக்கிய இனிய சந்தங்களுடைய பாடல்கள் பலநூறு ஆண்டுகளாக மனித இனத்தின் நினைவாற்றல் மற்றும் நுட்பமான மொழித்திறன், ஓசை நயங்கட்குச் சான்றாக வரிவடிவம் காணாமலே சப்தப்பிரமாணமாகக் காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றன என்றால் அது இந்துசமய சாஸ்திரங்களும், மரபுகளும் நீண்ட பாரம்பரியப் பெருமைக்கும் உள் வலுவான ஆற்றலையே வெளிப்படுத்துவதாகக் கருதலாம்.

மனிதகுல வரலாற்றின் வழி ஆராய்ந்தால் இயற்கை அபாயம், கொடிய விலங்குகளிடமிருந்து அச்சுறுத்தல் இவற்றிலிருந்து தப்புவதற்கு மனிதர்கள் ஆதியில் இருந்தே இணைந்த குழுக்களாகவே திரிந்தனர். இந்த ஆதிகால நாடோடி மனித இனக்குழுக்களின் தலைவியாகத் தாயே முதன்மை பெற்று விளங்கினார். ஒரே குழுக்களுள் கலந்து இனம் பெருக்கிய நிலைமாற வெவ்வேறு குழுக்களுடன் இணைந்து சந்ததி பெருக்கும் முறை வந்ததும் புதிய இனக்குழுக்கள் தாயின் பெயரால் அறியப்பட்டன. சுவிஸ் நாட்டு பச்சோ f பென் (Batcho fen) என்னும் மானிடவியல் அறிஞர் ஆதியில் மனித இனம் எந்த நியதியும் இல்லாத பாலினக் கலப்பில் விலங்கு நிலையில் பெருகியதும் தாய்வழி முதன்மை பெற்றது. 'குழப்பங்கள், பிரச்சினைகள் ஏமாற்று வஞ்சினைகள் ஏற்பட்டதும் தந்தைவழி மாற்றம் பெற்றனர் என பல காரணங்களுடன் விளக்குகின்றார்.[4]

### வேதகால நடைமுறைகள்

எனவே தந்தைவழிச் சமூக அமைப்பின் தோற்றம் கற்பொழுக்க விழுமியமே 'திருமணம்' என்னும் ஒழுக்கக் கோட்பாட்டினை முதன் முதல் தோற்றுவிப்பதற்கான காரணிகளில் முக்கியம் பெற்றன எனலாம். இப்பண்பினை இருக்கு வேதகால நன்கு திட்டமிட்ட குடும்ப அமைப்புக்களிலும் கணவன்-மனைவி உறவுகளிலும் பெரிதும் அவதானிக்க முடிகிறது. ரிக்வேத பாடல்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு ரிஷிகளால் பாடப்பட்டவை. அங்கு பெண்மையின் நல்லியல்புகள், மனைவி, மகள், சகோதரி என்ற உறவு நிலைகள் அருமையாகக் காட்டப்பட்டுள்ளன. ஆயிரமாயிரமான வேதபாடல்களை இசைப்பதற்கென்றே அவர்கள் தமக்குள் ஒரு பிரிவினையும் ஏற்படுத்தி அவர்கட்கு மிக உயர்ந்த சமுதாயப் பொறுப்பினையும் அளித்தனர். இப்பாடல்களினுள் வேத மந்திரங்களே இன்றும் முக்கியமாகத் திருமணச் சடங்கில் ஓதப்படுகின்றன. வேதகால சம்பிரதாயங்களும் சடங்கும் ஓதப்படுவன. வேதகால சம்பிரதாயங்களும் சடங்குகளும் இன்றுவரும் இந்துக்களால் உயிரிழந்து போய்விடாமல் தொடர்ந்தும் சமுதாய பாரம்பரியச் சின்னங்களாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஆணும் பெண்ணும் கூடி மகிழ்ந்து இனம் பெருக்க மக்களைப் பெறுகின்ற நிலையில் சமுதாய நாகரிக அறிவு வளர்ச்சி பெருகியதும் கட்டுக்கோப்பான திருமண ஒழுங்குமுறைகள் தோன்றின.

"திருமணம் செய்த தம்பதிகள் ஆண்:பெண் பிள்ளைகளைப் பெற்று நூற்றாண்டு வாழ்வார்களாக" (ரிக் 8.38.8)

எனவரும் ரிக்வேதக் குறிப்பில் கணவனும் மனைவியும் சரிநிகர் சமானமாகவும் வாழ்ந்தனர் என்பது உணர்த்தப்பட்டது. திருமணத்தின் மூலம் ஒரு பெண் வீட்டில் 'தலைவி' என்ற உயர் தகுதியைப் பெறுகின்றாள். அதனை

"வீட்டில் ஆட்சியுரியவரும் வீட்டுத்தலைவியே உமது வீட்டிற்குச் செல்வீராக" (ரிக் 10.85)

எனவரும் அடிகள் விளக்கும். இன்று திருமணத்தில் தாலி முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆனால் வேதகாலம் தாலியணியும் குறிப்புக்களைக் காணமுடியவில்லை. பதிலுக்கு பாணிக்கிரகனம் என்றும் 'கைப்பற்றல்' என்றும் திருமணத்தில் விளக்கப்பட்டது. திருமணச் சடங்கின்போது மணமகன் கையினைப் பற்றிக்கொண்டு

"நல்ல அதிஷ்டத்திற்காக உன்னைக் கைப்பிடிக்கின்றேன். உனது கணவனான என்னுடன் மூப்புவரை இருப்பாயாக. அர்யமான், சவிதிர் புரந்தி ஆகிய கடவுளர் உன்னை எனக்கு அளித்துள்ளனர்."[5]

எனவரும் அடிகள் திருமணம் ஒரு நீண்டகாலம் நிலைத்த உறவு என்பதனை புலப்படுத்துகிறது. இதன் காரணமாகவே திருமணம் 'ஆயிரங்காலத்துப் பயிர்' என்றும் போற்றப்பட்டது. கணவனையும் மனைவியையும் குறிக்கும் 'தம்பதி' என்ற சொல் இன்றளவும் இந்துக்கள் இடையே அதேபொருளில் விரவி ஆட்சி செய்கின்றது.

"இல்லாளே இல்லம்" (ரிக் 3.53.4)
"வீடு பூமியில் சொர்க்கம்" (ரிக் 10.107.10)
"கணவனை நேசிக்கும் களங்கமற்ற மனைவி" (ரிக் 1.73.3)

எனவரும் ரிக் 'வேதக் குறிப்பெல்லாம்' திருமணம் உறவிலே கணவனும் மனைவியும் சரிபாதியாக நின்று வாழ்க்கை நடத்துவோர் என அறிவிக்கின்றனவேயன்றி ஓரிடத்திலாவது ஒருவர் மற்றவர் அடிமை என்ற கருத்துப்படும் வாசகங்களே கிடையாது.

சமூகத்திலே காதல் திருமணங்களும் நடைபெற்றன. திருமணத்தின் பிரதான நோக்கம் ஆண்மகப்பேறாக இருந்தது. ஓயாது நடைபெற்ற போர்களும் இறுதியிலே ஈமக்கிரியைகள் செய்வதற்காக ஓர் ஆண் குழந்தை வேண்டும் என விரும்பப்பட்டிருக்கலாம்.

கணவன் இறந்த பின் மனைவி உடன்கட்டையேறும் வழக்கம் நடைமுறையில் காணப்படவில்லை. வேதகாலம் ஏகபத்தினி விரதமே பெரிதும் போற்றப்பட்டது.[6] எனவே வேதகாலம் பெண்கள் சிறப்பாக வாழச் சகல உரிமைகளையும் திருமணச் சடங்குகள் வழங்கியிருந்தன என்பது இதனாற் அறிய முடியும்.

இருக்குவேதத்தை அடுத்து யசுர், சாம, அதர்வ வேதங்களிலும் தொடர்ந்து திருமண முறையை ஒட்டிய குடும்ப அமைப்புக்கள் காணப்படுகின்றன. ரிக் வேதமே இது பற்றி அதிக தகவல்களைத் தருவதாகவுள்ளது. பிராமண இலக்கியங்களும் யாகக் கிரியைகளை முதன்மைப்படுத்தும்போது அதனை ஆற்றும் புரோகிதர்கள் தம்பதி சமேதராக கருமமாற்ற வேண்டுமென விதித்துள்ளன. மனைவியை இழந்தவர்கள் கிரியை ஆற்ற தகுதியற்றவர்கள் என பிராமண நூல்கள் கூறுகின்றன. இவற்றிலிருந்து புராதன இந்துக்களின் சிந்தனைப்படி படைப்புக் கடவுள் தாமே இருபகுதிகளாக பிரித்து ஆண் என்றும் பெண் என்றும் சக்திகளைத் தோற்றுவித்தார் என்றும் இவரே ஆதிஸ்வாயம்புவன், 'மனைவி' 'ஸ்த்ருபி' எனவும் பெயர் பெற்றனர் என்பதனை பிரகதாரணியம் போன்ற உபநிடதங்களும் உணர்த்தியுள்ளன.

திருமணச் சடங்கு தொடர்பான விடயங்களை ரிக்வேதத்தை அடுத்து சூத்திர இலக்கியங்களிலேயே காணமுடிகின்றது. கிருஷ்கிய சூத்திரங்கள் யாவும் இல்லறம் பற்றிய ஒழுங்கிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளன. யக்ஞவல்லிய, ஆஸ்வாலாயள, மாணவ, கிருஹ்சிய சூத்திரங்களில் அக்காலம் நடைமுறையிலிருந்த திருமணமுறைகள் விபரிக்கப்பட்டிருகின்றன. கிருஷ்ய சூத்திரங்களின் கருத்துப்படி மனித வாழ்வு நான்கு ஒழுக்க நிலைகளாக வகுக்கப்பட்டு அதில் 'கிருகஸ்தம்' என்றும் இரண்டாம் பிரிவுக்கு அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

***கிருகஸ்தாஸ்சிரமம்***

இயற்கையான உடல் தேவை-கட்டகாக் கூடிவாழும் மிருகங்களின் வாழ்வைவிட மனிதனின் கூட்டுவாழ்க்கை வேறுபட்டது. ஆண், பெண் கூட்டுறவானது இன்ப நுகர்வு மட்டுமன்றி அறச்சார்புடன் கூடிய சமூக வாழ்வின் அடிப்படை உயர்வினையும் குறிக்கோளாகக் கொண்டதாக அமைய வேண்டுமென்ற சிந்தனையில் திருமணம் என்ற அம்சம் முக்கியம் பெற்றது. மனிதவாழ்வில் இயற்கை உணர்வால் உந்தப்பட்ட ஆணும் பெண்ணும் ஒன்றிணைந்து வாழ எண்ணியபோது 'ஒழுங்கு நிலை' ஒன்று உருவாகும் தேவை ஏற்பட்டது. தமது இணைப்பு மட்டுமே முக்கியமெனக் கருதாது சந்ததிகளையும் தமது சுற்றத்தவர்களையும் தமது இணைப்பினால் ஒன்று படுத்துவதற்கு அறச்சார்புடன் கூடிய திருமண ஒழுங்கின் அவசியம் இந்துக்களால் உணரப்பட்டதை சூத்திர இலக்கியங்களும் உணர்த்தியுள்ளன. அதனால் வள்ளுவமும் "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என வரையறை செய்தது. திருமண ஒழுங்கின் மூலமே இல்லற வாழ்வை நிறைவாக்க முடியும் என உணர்ந்தபோது 'கிருகஸ்தாசிரமம்' என்னும் உயர் நிலை உலக வாழ்வாக திருமண வாழ்வு இந்துக்களால் சிந்திக்கப்பட்டது.

***எண்வகைத் திருமண மரபுகள்***

பிரமச்சரிய வாழ்வை பூரணப்படுத்திய பின் மனிதன் தனது வாழ்வின் இரண்டாம் கட்டமாக திருமண சம்மந்தத்தில் நுழைகிறான். பிரமச்சாரியத்தில் பெண் 24 வயது வரையும் ஆண் 44 வயது வரையும் பூரண விரதம் மேற்கொண்டு சகல வித்தைகளையும் கற்ற பின்னர் திருமணம் செய்யலாம் எனவும் சூத்திர இலக்கியங்கள் சில கூறும். பிரமச்சரியத்தில் மிகக் குறைந்த வயது பெண்களுக்கு 16ம், ஆண்களுக்கு 24ம் என்றே பொதுவாக அறநூல்கள் விதிக்கின்றன.[7] திருமண வயதெல்லை பற்றி வேறுபட்ட கருத்துக்களும் சூத்திர இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. கிருவுகிய சூத்திரங்களில் பொதுவாக

எண்வகை மணமுறைகள் அக்காலம் வழக்கில் இருந்ததாக அறியப்பட்டுள்ளன. ஆஸ்வாலயன கிருஷ்கிய சூத்திரம் இதை தெளிவாக தந்திருக்கின்றது.[8] தர்மசாஸ்திரங்களிலும் இவ்வாறான எண்வகைத் திருமணங்கள் கூறப்பட்டுள்ளன. அவையாவன: 'பிரம்ம விவாகம், ஆர்ஷ விவாகம், காந்தர்வம், அசுர தெய்வீக விவாகம், பிராஜாபத்ய, இராட்சதம், பைசாசம் என்பனவாகும்.[9] இவற்றின் முழுமையான தகவல்களை மனுதர்மசாஸ்திரம் விரிவாக விளக்குகின்றது. இதனை ராஜ்பாலி பண்டே என்பாரும் தனது நூலில் அமைத்து நன்கு தெளிவுபடுத்தியுள்ளார்.[10] வேத விற்பன்னரான பிரமச்சாரிக்கு வலியச் சென்று பெண்ணை அவனுக்கு தானம் கொடுப்பது பிரமவிவாகம். வேள்வி தீ முன் அதனை நடத்தும் ஆசிரியர்க்கு தனது மகளை தாரைவார்த்து கொடுப்பது தெய்வ விவாகம், மணமகள் வீட்டார் தரும் பொருளுடன் தாமும் பெண்ணுக்கு பொருள் கொடுத்து மணத்தல் பிரஜாபத்யம், ஒரு காளையையும் பசுவையும் பெற்றுக்கொண்டு பெண்ணை மணம் முடித்தல் அர்வாகம். வில்வித்தை, ஏறுதளுவல் போன்ற பராகிரமச் செயல்களால் வென்று பெண்ணை பரிசமாகப் பெறுதல் அசுரசுரமுறை, வயது வந்த ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி தாமாகவே மணந்து கொள்வது காந்தர்வம், பெண்களின் விருப்பம் இன்றி அவளைக் கவர்ந்து சென்று மணம் முடித்தல் இராச்சத மணமுறை, (இது தானே மணப்பது அல்லது பிறருக்கு மணம் முடித்து வைப்பது), பைசாச மணமுறை என்பது பெண்வயதில் மணமகனைவிட முத்தவள் ஆகவும் கள்ளுண்ட நிலையிலும் உறக்க நிலையிலும் உள்ளபோது விருப்பத்துக்கு மாறாக பலாத்காரமாக கெடுத்தபின் மணம்புரிதல். இது விலக்கப்பட்ட மணம் என மனுவே சொல்கின்றார்.[11]

இங்கு பொதுவாக ஆண் பொருள் கொடுத்து பெண் மணம் புரியும் முறைமையே பெரிதும் காணப்பட்டது. தற்காலத்தில் இந்த நிலையில் எத்தகைய மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதனை விளக்குவதனைவிட திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட நிலை மாறி அது ரொக்கத்தில் நிச்சயிப்பதாக இன்று அமைந்துவிட்ட நிலையில் எவரும் கண்கூடாகக் காணலாம். இன்று காதல் மணமாக இருந்தாலும்சரி நிச்சயிக்கப்பட்ட மணமாக இருந்தாலும் சரி ஆணும் பெண்ணும் திருமணம் செய்வதற்கு முன்னர் பெண்ணின் பொருளும் தொழிலுமே திருமணத் தகுதிகளாக மாறிய நிலையில் ஜாதகப் பொருத்தமும் மணப்பொருத்தமும் செல்லாக் காசாக மாறிவிட்டன. காளையும் பசுவும் கொடுத்தும், பெண்ணுக்குப் பரிசம் போட்டும் நடந்ததாம் தர்ம சாத்திரநூல்கள் கூறும் திருமணமுறைகள். எங்கே பதிலுக்கு காசியாத்திரைக்கு கைத்தடி, குடை, செருப்பு, நோன்பிற்கு நூற்றெட்டு அதிரசம் அவற்றை வைப்பதற்கு வெள்ளிக்கூடை, மற்றும் கன்னிகாதானம் செய்யும் போதுகூட மாப்பிள்ளையை மகாவிஷ்ணுவாகவோ பரமேஸ்வரனாகவோ பாவித்து தாய் நீர் வார்க்க தந்தை கால்கழுவ, பெண்ணின் பெற்றோரும் பெண்ணும் பொருள் கறக்கும் கறவைகளாக மாறுகின்ற தற்காலத் திருமணங்களைப் பற்றி சொல்ல என்ன இருக்கின்றது.

***வாக்குத்தானம்***

மனுநூலைப் பொறுத்தவரை அது திருமணத்தின் புனிதத்தை பேணத் தவறவில்லை. 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்றார் ஔவையார். அதாவது தம்பதிகள் இருவரும் அவையோர் சாட்சி, அந்தணர் சாட்சி, அக்கினி சாட்சியாக செய்துகொண்ட சத்தியப்பிரமாணத்தை மீறக்கூடாது என்பதேயாகும். இறுதிவரை காப்பேன் எனக் கொடுத்தவாக்கைக் காப்பாற்றுவதே உயர்கற்பொழுக்கத்திற்கு சமனாகும். இதனை,

''ஒருவனுக்கு மணம் பேசியபின் கன்னிகாதானத்தின் மகிமை அறிந்தவர் வாக்களித்த தந்தை இறந்துவிட்டாலும்

வாக்கு மாறக்கூடாது. அப்படிவேறொருவனுக்குக் கொடுத்தால் ஆயிரம் உயிர்களைக்கொன்ற பாவம் அவனைச்சாரும்."[12]

என வாக்குத்தந்ததின் மகிமை மனுவாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இன்னொன்று மாப்பிள்ளைக்கு வேலை கிடைப்பதற்கு முன் ஐந்து லட்சம் சீதனம் பேசியவர்கள் திருமணம் செய்யமுன் வேலை கிடைத்துவிட்டாலோ அதனை எட்டு லட்சமாக மாற்றி உயர்த்தி தமது ஆண் வர்க்கப் பெருமையை பேணும் பேருகளாகவுமுள்ளனர். முன்னர் மணமகள் என்பதெல்லாம் தற்காலம் 'மாப்பிள்ளை' என்று சொல்லப்படுவதால் மாவிளைல் செய்தபிள்ளை- ஆதலால் தான் விருப்பத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொள்வதால் மணமகன் மாப்பிள்ளை ஆனார் போலும்.

### *இதிகாசங்களில்*

இதிகாச இலக்கியங்களிலும் திருமணத்தின் தெய்வீகம் போற்றப்பட்டு வந்துள்ளது. "விவாகம் என்பது ஒரு பெண்ணின் ஆன்ம சௌந்தர்ப்பத்தை வெளிப்படுத்தும் புதியபிறவி" என்றே இராமாயணம் கூறும்[13] இராமாயணத்தில் ஐவகைத் திருமணங்கள் பற்றியே பேசப்பட்டுள்ளன. காந்தர்வம், பிரஜாபத்திய மணமுறைகள் இருந்தன. பெண்ணும் ஆணும் ஒத்த குலமும், தகுதியும் உடையவராய் இருத்தல் உத்தம விவாகம் என்றும், சகோதரன் சகோதரி திருமண உறவு தர்ம விரோதம் எனவும் கொள்ளப்பட்டது. மேலும் பெண்கள் தாமாகவும் விரும்பிய கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் இருந்தது. சத்தியவான்-சாவித்திரி, நளன்-தமயந்தி, அரிச்சந்திரன்-சந்திரமதி போன்ற அரச குமாரிகள் விவாகம் இதற்கு தக்க சான்றாகும். போட்டியில் வெற்றியடைந்த வீரனைக் கணவனாக அடையும் சுயம்வரத் திருமணமும் இருந்தது. இராமன்-சீதை, அருச்சுனன்-திரௌபதி இத்தகைய திருமணத்தால் இணைந்து கொண்டோர் ஆவர். தந்தையோ, தமையனாரோதான் தனது சகோதரிக்கு திருமணம்செய்து வைக்கும் பொறுப்பாக இருந்தனர். அக்காலம் விவாகம் செய்வதற்கு வயதெல்லை இருந்ததாகக் கூற முடியாவிட்டாலும் இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் நடக்கும் போது பதினாறும், பதினைந்து வயதுடையவர்களாகவும் இருந்தனர் என அறியப்பட்டுள்ளது. எனினும் ஆண் பெண்ணிலும் வயது முதிர்ந்திருக்க வேண்டும் என்ற சிந்தனை காணப்படுகின்றது.[14]

பலதார திருமணம் பண்டைய இந்துக்களிடையே-மன்னர்களிடையே பெருவழக்காக இருந்ததை தசரதன், இராவணன், அருச்சுனன் போன்றவர்களது வரலாற்றால் அறியலாம். ஆயினும் இராமாயணம் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற 'ஏகபத்தினி' விரதனாக வாழ்ந்த இராமனையே பெருமைப்படுத்துவது. பலதார மணம் வெறுக்கப்பட்டு 'ஒரு தாரம்' என்பதே உயர்வானது என்பதையே இந்து சமூகம் தெரிவு செய்திருந்தது என்பதனை அது வெளிப்படுத்துகின்றது. அவ்வாறே இந்துக்களிடையே 'ஒருதார மணம்' நன்கு வேரூன்றி நிலைபெற்றுவிட்டது. இதனை உறுதிப்படுத்தவே பதிவுத் திருமணச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஒருவர் இரண்டு மணம் செய்வதானால் பதிவு செய்யமுடியாது என்றும் நடைமுறை விதியிலிருந்து 'ஒருதார மணத்தின்' உயர்வினையும் ஒழுக்கநேர்மையினையும் எளிதில் கண்டுணர முடியும்.

### *தமிழ் இலக்கியங்களில் திருமணங்கள்*

தமிழ்மொழியின் இலக்கணத்தை வகுத்துத் தந்த தொல்காப்பியம் தமிழர் வாழ்வியல் முறைகளின் இலக்கணத்தை களவியல், கற்பியல் என இரண்டாக வகுத்துத் தந்துள்ளது. ஓர் ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் கண்டு இயற்கை நிலையில் இன்பம் நுகர்தல் களவு நிலையாகும். இந்நிலையைப் பிறரும் அறிய வைத்து இணைந்து வாழ்வது கற்புநிலை எனப்பட்டது.[15] சங்கநூல்களில் 'திருமணம்' என்ற சொல்லிற்குப் பதில் மணம், வரைவு, வதுவை, மகட்கொடை, மன்றல், உடன்போக்கு என்ற பெயரிலேயே இருவர் இணையும் இல்வாழ்வு குறிக்கப்பட்டது.

இச்சொற்கள் 'விவாகம் செய்தல்' என்ற பொருளிலே கையாளப்பட்டதாகக் கலைக்களஞ்சியமும் கூறும்.[16] களவுநிலை, கற்புநிலை என்னும் ஒழுக்கநிலைகளே தொல்காப்பியரது திருமணமுறைத் தொகுப்பிற்குக் காரணமானது. சமூக அமைப்பிலே ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதை பலர் அறியச் செய்வதே வரைவு எனப்படும்.[17] எனவே திருமணம் கற்புநிலையை உறுதி செய்வதாகவும் அமைந்தது. திருமணம் ஆண் பெண் ஒழுக்கநிலையை வரைவு செய்வதால் அது உறவினர்களால் கற்பு நிலையெனப் பேணப்பட்டது. கற்பு என்பது உறவுகளை அடிப்படையாகக் கொண்டும் அமையும் என்பதனை,

> "கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
> கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியை
> கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்
> கொள்வதுவே"[18]

எனத் தொல்காப்பியம் குறிப்பிட்டது. கரணம் என்பது வதுவைச் சடங்கு என இளம்பூரணர் உரை கொள்வர். எனவே திருமணம் என்பது கரணம் முதலிய சடங்குகளுடன் கூடிய நடைமுறையாக மலருவதனை இச்சூத்திரம் கோடிட்டுக் காட்டியது. எனவே சங்ககாலத்தில் தமிழர்களிடையே களவு மணம், மகப்பேற்று மணம், எனத் திருமணங்கள் மக்களிடையே இடம் பெற்றமையினை சங்கநூல்கள் களவு மணம், கற்பு மணம், உடன்போக்கு மணம் என்ற மூன்று பிரிவில் அடக்கிக் கூறியதாகக் கொள்ளப்படும்.[19] எனவே இதனை இணைத்துப் பார்க்குமிடத்து எண்வகைத் திருமணமுறைகட்கும் இவற்றுக்கும் செயல்முறைகளால் பெருமளவு ஒருமைப்பாடுகள் இருப்பது புலப்படும். வேத இலக்கியங்களில் வேறு பெயர்களிலும் அவை அழைக்கப்பட்டாலும் 'திருமணம்' என்பது ஆண், பெண் இருபாலாரின் அகப்புற இணைப்பின் சமூக ஒழுக்கத்தை விளக்கும் சடங்குமுறை என்பதனை இவை தெளிவாக்குகின்றன.

***அடிக்குறிப்புகள்***

1. சிவஞானம், ம.பொ., <u>தமிழர் திருமணம்,</u> சென்னை, 1990, ப.6
2. ராஜம் கிருஷ்ணன், <u>காலம் தோறும் பெண்,</u> சென்னை, 1994, ப.29.
3. Pandey Rajpali, **<u>Hindu Samskaras, Socio Religious Study of the Hindu Sacraments</u>**, Mothilal Banasidas, Delhi, 1994, p. 157.
4. ராஜம் கிருஷ்ணன், மு.கு.நூல், ப.16.
   Pandey Rajpali, Opcit pp.157-158
5. சிவசாமி,வி., <u>ஆரியர் ஆதி வரலாறும் பண்பாடும்,</u> கலைவாணி அச்சகம், யாழ்ப்பாணம், 1976, ப.71.
6. மேற்படி, ப.72.
7. பரமேஸ்வரானந்தா சுவாமி, <u>ஹிந்து தர்மபரிச்சயம்,</u> கன்யாகுமரி, தமிழ்நாடு, 1983, ப.74.
8. Pandey Rajpali, Opcit, p.159.
9. திரிலோகசீதாராம், (தமிழில்) <u>மனுதர்ம சாத்திரம்,</u> சென்னை, 1989, ப. ,சுலோகம் 21-34.
10. Pandey Rajpali, opcit, pp. 159-170
11. மனுதர்ம சாத்திரம், ப.72-73
12. மேற்படி, சுலோ:71.

13. ஆனந்தகுரு கே, இராமாயண சமூகம் (The Society of Ramayana) தமிழில்: நா.இராமலிங்கம், கண்டி, 1966, ப.163.
14. மேற்படி, ப. 165.
15. சண்முகதாஸ், அ., மனோன்மணி சண்முகதாஸ், தமிழர் திருமண நடைமுறைகள் (பதிப்பு) முத்தமிழ் வெளியீட்டுக்கழகம், யாழ்ப்பாணம், 1976, ப.9.
16. கலைக்களஞ்சியம். தொகுதி IV,V, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1935, பக். 3490, 3526, 2977, 398.
17. சண்முகதாஸ், அ., மு.கு.நூல், ப.10.
18. தொல்காப்பியம், கற்பியல், சூத். 53.
19. சண்முகதாஸ், அ., மு.கு.நூல், ப.26.

உசாவியவை.

1. மங்களா முருகேசன், இந்திய சமுதாய வரலாறு. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடு, சென்னை.
2. சிவபாதம், ந., புத்தொளி; சைவத்திருமண முறைகள். திருச்செல்வி அச்சகம், யாழ்ப்பாணம்.
3. வித்தியானந்தன், சு., தமிழர் சால்பு. கும்பகோணம், (தமிழ் மன்றம், கண்டி) 1954.
4. விவேகானந்தர் சுவாமி, இந்தியப் பெண்மணிகள். ஸ்ரீ இராமகிருஷ்ண மடம், சென்னை, 1987.
5. Keith, A.B., The Religion and Philosophy of Vedas and Upanishads, Vol. II, Oxford University, London, 1952.